# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

# 1985 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, சருவதேச நீர்ப்பாசன முகாமைத்துவ நிறுவகச் சட்டம்

*[1985, சனவரி மாதம் 9 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

1985, சனவரி மாதம் 11 ஆம் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : ரூபா 1.50 தபாற் செலவு : சதம் 30

# 1985 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, சருவதேச நீர்ப்பாசன முகாமைத்துவ நிறுவகச் சட்டம்

[1985, சனவரி மாதம் 9 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.—ஓ. 19/84
1657

**சருவதேச நீர்ப்பாசன முகாமைத்துவ நிறுவகத்தினைத் தாபிப்பதற்கும், அதனோடு தொடர்புபட்ட, அத்துடன் அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.**

இலங்கை அரசாங்கத்திற்கும், சருவதேச நீர்ப்பாசன முகாமைத்துவ நிறுவக ஆதரவுக் குழுவின் சார்பில் செயலாற்றும் போர்ட் மன்றத்திற்கு மிடையே, சருவதேச நீர்ப்பாசன முகாமைத்துவ நிறுவகத்தினைத் தாபிப்பதற்கான உடன்படிக்கையொன்று செய்துகொள்ளப்பட்டுள்ளதாதலாலும் : முன்னுரை.

அத்துடன், இலங்கை அரசாங்கத்தினால் உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிறுவகத்தின் பட்டயத்திற்கிணங்க இலங்கைக்குள்ளாக அத்தகைய நிறுவகம் திறமையாக இயங்குவதனை இயலச் செய்வதற்குச் சட்ட ஏற்பாடுகளைச் செய்வது அவசியமானதும் உசிதமானதாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டமானது, 1985 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, சருவதேச நீர்ப்பாசன முகாமைத்துவ நிறுவகச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன், காணிகளும் காணி அபிவிருத்தியும் எனும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரினால் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம், நியமிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும். சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.

## பாகம் I

### சருவதேச நீர்ப்பாசன முகாமைத்துவ நிறுவகத்தினைத் தாபித்தல்

2. இதனகத்துப்பின்னர் "நிறுவகம்" எனக் குறிப்பிடுசெய்யப்படும் சருவதேச நீர்ப்பாசன முகாமைத்துவ நிறுவகம் என அழைக்கப்பட வேண்டிய நிறுவகமொன்று இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்கத் தாபிக்கப்படுதல் வேண்டும். இது சருவதேச தன்மைத்தான தன்னிச்சையான ஒழுங்கமைப்பாகத் தொழிற்படுதல் வேண்டும். சருவதேச நீர்ப்பாசன முகாமைத்துவ நிறுவகத்தைத் தாபித்தல்.

3. நிறுவகமானது, 2 ஆம் பிரிவினால் அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட பெயரினால் இடையறா வழியுரிமையையும் ஒரு பொது இலச்சினையையும் கொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டும். அத்துடன் அதன் கூட்டிணைக்கப்பட்ட பெயரில் அது வழக்குத்தொடரலாம் என்பதுடன், அதற்கெதிராக வழக்குத்தொடரவும்படலாம். நிறுவகமானது கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டும் என்பது.

2—ஏ 080203—2,900 (11/84)

நிறுவகத்தின் தலைமையலுவலகம் பிரதான அலுவலகம், முகவராண்மைகள், அலுவலகங்கள் முதலியன.

4. (1) நிறுவகத்தின் தலைமையலுவலகமும் பிரதான அலுவலகமும், இலங்கையில் கிணியில் அல்லது அரசாங்கத்திலும் நிறுவகத்திலும் பரஸ்பரம் உடன்பட்டுக்கொள்ளக்கூடியவாறான, இலங்கையிலுள்ள அத்தகைய வேறு இடத்தில் இருத்தல் வேண்டும்.

(2) நிறுவகமானது, அரசாங்கத்தினது ஒருப்பாட்டுடன், அது காலத்துக்குக் காலம் அவசியமானதெனக் கருதக்கூடியவாறான அத்தகைய வேறு அலுவலகங்களையும், முகவராண்மைகளையும் வெளிக்களத் தொழிற்பாட்டு நிலையங்களையும் இலங்கையில் அத்தகைய இடங்களில் தாபிக்கலாம்.

(3) நிறுவகமானது, அதன் குறிக்கோள்களை எய்துவதற்கு எந்தளவிற்கு அத்தகைய கிளை அலுவலகங்கள், முகவராண்மைகள், கூட்டுறவு நிலையங்கள் அல்லது வெளிக்களத் தொழிற்பாட்டு மையங்கள் உதவ முடியும் என்பதனைக் கருத்தில் கொண்டு அது காலத்திற்குக் காலம் தீர்மானிக்கக்கூடியவாறு அத்தகைய வேறு நாடுகளில் கிளை அலுவலகங்களையும் முகவராண்மைகளையும், நிலையங்களையும், மையங்களையும் தாபிக்கலாம்.

நிறுவகத்தின் குறிக்கோள்கள்.

5. நிறுவகம் தாபிக்கப்பட்டதற்கான குறிக்கோள்கள், முதன்மையாக நீர்ப்பாசன முறைகளின் முகாமைத்துவத்தையும் செயற்பாட்டையும் முன்னேற்றுவதனையும், குறிப்பாகப் பின்வருவனவற்றுக்கான வழிவகைகள், உபாயங்கள் நடவடிக்கைமுறைகள், வழக்காறுகள், நடைமுறைக்கான அணுகுமுறைகள் என்பனவற்றை மேம்படுத்துவதனையும், நோக்கி நெறிப்படுத்தப்படுதல் வேண்டும் :—

(அ) விவசாய உற்பத்திக்கான நீரின் பாவனையின் வினைத்திறமையினை நடுநிலைப்படுத்தல் ;

(ஆ) நீர்ப்பாசனத்தாலான நன்மைகளைப் பங்கீடுசெய்வதில், தங்கியிருக்கக்கூடிய தன்மையினையும், ஒப்புரவினையும் உறுதிப்படுத்தல் ;

(இ) நீர்ப்பாசன முறைகளின் முகாமைத்துவத்தினையும் நிறைவேற்றலையும் மதிப்பீடுசெய்தலும் சீர்திருத்துதலும் ;

(ஈ) நீர்ப்பாசன முறைகளால் பாதிக்கப்பட்ட பகுதிகளில், நீர் பாய்ச்சப்பட்ட மண்ணினதும் சூழலினதும் தரத்தையும், அதேபோல கிராமிய விவசாய சமுதாயங்களில் சுகாதாரத்தினையும் வாழ்க்கைப் பொதுநலனையும் தரத்தையும் பாதுகாத்தலும், பேணுதலும், சீர்திருத்துதலும் ; அத்துடன்

(உ) வருவாய் பெருக்கும் உள்ளீடுகளில் முதலீடு செய்வதிலுள்ள அபாயங்களைக் குறைப்பதன் மூலம் நீர் வழங்களின் நம்பகத்தன்மையைச் சீர்திருத்துதலும்,

எதிர்காலப் பாவனையாளர் தொகுதிகளிடையேயும் ஒழுங்கமைப்புக்களிடையேயும் நீர்ப்பாசனத்துடன் தொடர்புபட்ட ஏனைய ஆட்கள் குழுக்களிடையேயும் ஆட்களிடையேயும் அதுபற்றிய தகவலைப் பங்கிடுதலும் பரப்புதலும்.

6. நிறுவகமானது, அதன் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு நியாயமான அளவு அவசியமானதென அது கருதக்கூடியவாறான பின் வரும் எல்லாக் கடமைகளையும் பணிகளையும் அல்லது அவற்றில் எதனையும் புரிதலும் நிறைவேற்றுதலும் வேண்டும் :— நிறுவகத்தின் கடமைகளும் பணிகளும்.

(அ) நீரோட்டத்தையும் விநியோகத்தையும் வடிவமைத்தல், நிர்மாணித்தல், தொழிற்படுத்துதல், ஒழுங்குபடுத்தல், நீரின் விலை குறித்தலும் அதற்கான கொள்கைகளும், மண், சூழல் சம்பந்தப் பட்ட மக்களின் சுகாதாரம், பொது நலன் முதலியவற்றின் மீது அவற்றின் தாக்கங்களும் உட்பட நீர்ப்பாசன முறைகளையும் அவற்றின் தொழிற்பாடு, முகாமை பற்றிய எல்லாக் கட்டங்களை யும் பற்றி ஆய்வு செய்தலும் மதிப்பீடு செய்தலும் ;

(ஆ) நீர்ப்பாசன முறைகளின் வினைத்திறமை, நம்பகத்தன்மை, பங்கீட்டில் ஒப்புரவு என்பன உட்பட நீர்ப்பாசன முறைமையை முகாமை செய்வதிலும் நிறைவேற்றுவதிலும் சீர்திருந்திய கற்கைமுறைகளையும் பகுப்பாய்வு முறைகளையும் மதிப்பீட்டு முறைகளையும் அபிவிருத்தி செய்தல் ;

(இ) நீரை ஆகக்கூடிய அளவு பயன்படுத்துவதில் உள்ள தடைகளை அகற்றுதலும், சீர்திருந்திய முகாமைக்கும் தொழிற்பாட்டுக்குமான ஊக்குவிப்புக்களுக்கு ஏற்பாடு செய்வதும் உட்பட, நீர்ப் பாசன முறைமையிலும் நீர்ப்பயன்பாட்டின் பயனுள்ள தன்மையிலும் உள்ள குறைபாடுகளை கண்டறிதலும் செம்மைப் படுத்தலும் ;

(ஈ) நீர்ப்பாசன முறைமைகளில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் அல்லது நீரை ஆகக்கூடிய அளவு பயன் படுத்துவதிலுள்ள பயனுள்ள தன்மையிலும் உள்ள தடைகளை அகற்றும் நோக்கத்துக்காக நீர்ப்பாசன முறைமைகளிலுள்ள இடையீடுகளைக் கண்டுபிடித்தலும் அத்தகைய இடையீட்டின் தாக்கங்களைக் கணிப்பீடு செய்தலும் மதிப்பீடு செய்தலும் ;

(உ) மண், சுற்றாடல், உடல்நலம் சம்பந்தப்பட்ட மக்களின் பொதுநலன் ஆகியவற்றில் அத்தகைய இடையீடுகள் விளைவிக்கும் தாக்கங்கள் பற்றி ஆய்வுசெய்தலும் பகுப்பாய்வு செய்தலும் மதிப்பீடு செய் தலும் ;

(ஊ) அத்தகைய ஆய்வுகளினதும் செயற்பாடுகளினதும் விளைவுகளைச் சேகரித்தலும் பகுப்பாய்வு செய்தலும் வெளியிடுதலும் பரப்பு தலும் ;

(எ) நிறுவகத்தில், ஆய்வுகளும் செயற்பாடுகளும் தொடர்பான தரவு வங்கி ஒன்றைப் பேணுதலும், பொதுவாக நீர்ப்பாசன முறைகள் பற்றியதும் நிறுவகத்தின் குறிக்கோள்களுக்கும், செயற்பாடு களுக்கும் இயைபானதுமான மற்றெல்லாக் கருமங்கள் பற்றிய தகவலைத் தரும் தகவல் நிலையமொன்றையும் நூலகம் ஒன்றையும் தரவு வங்கி ஒன்றையும் தாபித்தலும் தொழிற்படுத்தலும் ;

(ஏ) நீர்ப்பாசன முறைமைகள் பற்றிக் கற்றல், மதிப்பீடு செய்தல், அவற்றைப் பகுப்பாய்வு செய்தல், வடிவமைத்தல், நிர்மாணித்

தல், அபிவிருத்தி செய்தல் அல்லது தொழிற்படுத்துதல் ஆகிய ஏதேனும் அம்சம் தொடர்பாக அல்லது இவை தொடர்பான ஏதேனும் ஆராய்ச்சியில், கல்வியில், தகவலில் அல்லது செயற்பாட்டு நிகழ்ச்சித்திட்டத்தில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்ற அல்லது ஈடுபடவுள்ள ஆட்களுக்குப் பயிற்சியளித்தல்;

(ஐ) நிறுவகத்தின் செயற்பாடுகளைத் திட்டமிட்டு மதிப்பீடு செய்வதற்காகவும் நிறுவகத்தின் வேலை தொடர்பான தகவலைப் பரிமாற்றம் செய்வதற்காகவும் நிறுவகத்தின் குறிக்கோள்களுடனும் செயற்பாடுகளுடனும் தொடர்புபட்ட அல்லது அவற்றிற்கு இயைபான ஆட்களுக்கான மாநாடுகளையும் கருத்தரங்குகளையும் ஆய்வரங்குகளையும் உசாத்துணைச் சேவைகளையும் வேலைக்களங்களையும் கூட்டங்களையும் ஒழுங்கமைத்து நடாத்துதல்;

(ஒ) நாடுகளினாலும் ஒழுங்கமைப்புகளினாலும் ஒத்துழைப்புத்தரும் நிலையங்களினாலும் ஏனைய நிறுவனங்களினாலும் குழுக்களினாலும் நிறுவகத்தின் வேலையைச் சிறப்பாகப் பெறத்தக்க வகையிலும் பிரயோகிக்கத்தக்க வகையிலும் நிறுவனம் சார்ந்த அல்லது வேறுவகையான ஒழுங்குகளை வலுப்படுத்தலும், திரிபுபடுத்தலும் சீராக்கலும், அத்துடன் நாடுகளுக்கும் ஒழுங்கமைப்புகளுக்கும் ஒத்துழைக்கும் நிலையங்களுக்கும் ஏனைய நிறுவனங்களுக்கும், குழுக்களுக்கும் நிறுவகத்தினால் தகவலும் ஆலோசனையும் அளிக்கப்படுவதற்கு ஏற்பாடுசெய்தலும்; அத்துடன்

(ஓ) நிறுவகத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கு அவசியமானவை அல்லது பயன்தருபவை அல்லது உசிதமானவை என அது கருதக்கூடியவாறான அத்தகைய வேறு செயற்பாடுகள்.

**நிறுவகத்தின் தத்துவங்கள்.**

7. நிறுவகமானது அதன் குறிக்கோள்களை எய்துவதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய தத்துவங்கள் அனைத்தையும் கொண்டிருத்தல் வேண்டும். அத்துடன் குறிப்பாக :—

(அ) ஏதேனும் அரசாங்கத்திடமிருந்து சருவதேச ஒழுங்கமைப்பிடமிருந்து அல்லது அதன் ஏதேனும் முகவர் நிலையத்திடமிருந்து அல்லது துணைநிலையத்திடமிருந்து அல்லது அரசியல் உட்பிரிவிடமிருந்து அல்லது எவரேனும் ஆளிடமிருந்து, ஆட்கள் குழுவிடமிருந்து, கூட்டுத்தாபனத்திடமிருந்து அல்லது வேறு சட்ட ஆளுமையிடமிருந்து மானியக் கொடையாக, கொடையாக, கொள்வனவாக, கொடுத்துமாற்றலாக, குத்தகையாக, மரணசாதனப் பொருளாக, மரணசாதனக் கையளிப்பாகவாயினுஞ்சரி அல்லது வேறு வகையாகவாயினுஞ்சரி அத்துடன் பூரணமாகவாயினுஞ்சரி, அல்லது நம்பிக்கைப்பொறுப்பாகவாயினுஞ்சரி அத்தகைய பட்டயங்களை, வாக்குரிமைகளை, உரிமங்களை, சிறப்புரிமைகளை, சலுகைகளை, உதவிகளை, நிதிகளை அத்துடன் அத்தகைய அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தை அல்லது அவற்றின்கண் உள்ள உரிமைகளை அத்துடன் நிறுவகத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கு அவசியமாகக்கூடியவாறான அல்லது பயனுடையனவான அல்லது உகந்தனவான அத்தகைய வேறு உரிமைகளையும் சொத்துக்களையும் கொள்ளலாம், பெறலாம் அல்லது ஏற்றுக்கொள்ளலாம்;

(ஆ) நிறுவகத்தின் அசைவுள்ளனவும் அசைவற்றனவுமான ஆதனங் களையும், நிதிகளையும், உரிமைகளையும், சொத்துக்களையும் கொள்ளலாம், வைத்திருக்கலாம், சொந்தமாக்கலாம், பயன் படுத்தலாம், தொழிற்படுத்தலாம், குத்தகைக்குவிடலாம் அல் லது வேறுவிதமாகக் கையாளலாம்;

(இ) நிறுவகத்தின் நிதிகளை முதலீடு செய்யலாம், வங்கிக் கணக்கு களைத் தொழிற்படுத்தலாம், பணம் கடன் எடுக்கலாம், கடன் வசதி பெறலாம், கடப்பாடு பற்றிய சான்றுகளை வழங்கலாம் அத்துடன் நிறுவகத்தின் கடன்களுக்காகவும் பொறுப்புகளுக் காகவும் நிறுவகத்தின் ஏதேனும் ஆதனத்தின் உரிமைகளை அல் லது சொத்துக்களை ஈடுவைக்கலாம், அடகு வைக்கலாம் அல்லது வழங்கலாம்;

(ஈ) நிறுவகத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கு அவசியமாகக்கூடிய வாறான அல்லது பயனுடையனவாகக்கூடியவாறான அல்லது உகந்தனவாகக்கூடியவாறான அத்தகைய எல்லா கட்டடங்களையும் கட்டமைப்புக்களையும் பொறித்தொகுதிகளையும் எந்திரத் தொகுதிகளையும் சாதனத்தையும் வசதிகளையும் நிர்மாணிக் கலாம், கொள்வனவு செய்யலாம், நிறுவலாம் அத்துடன் பெற லாம்;

(உ) நிறுவகத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கு அவசியமாகக்கூடிய வாறான அல்லது பயனுடையனவான அல்லது உகந்தனவான அத்தகைய அலுவலர்களையும் உசாத்துணை அலுவலர்களையும் சேவையாளர்களையும் முகவர்களையும் நியமிக்கலாம், தொழிலுக் கமர்த்தலாம், அவர்களுக்கு ஊதியமளிக்கலாம், அவர்களைப் பதவியிலிருந்து விலக்கலாம், அவர்கள்மீது ஒழுக்காற்றுக் கட் டுப்பாட்டைப் பிரயோகிக்கலாம்;

(ஊ) நிறுவகத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கு அவசியமாகக்கூடிய வாறான அல்லது பயனுடையனவான அல்லது உகந்தனவான அத்தகைய எல்லா ஒப்பந்தங்களையும் உடன்படிக்கைகளையும் ஒன்றில் நேரடியாக அல்லது நிறுவகத்தினால் அதன் சார்பில் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் அல்லது முகவர் மூலமாகச் செய்துகொள்ளலாம், புரியலாம் அல்லது நிறைவேற்றலாம்;

(எ) நிறுவகத்துக்கு ஒத்துழைப்புத்தரும் ஏனைய நிறுவனங்களினதும் முகவர் நிலையங்களினதும் மற்றும் நிலையங்களினதும் தொழிற் பாடுகளுக்கும் நிகழ்ச்சித்திட்டங்களுக்கும் ஆதரவாக நிதிகள், பொருட்கள், சேவைகள் முதலியனவற்றை ஏற்பாடுசெய்யலாம்;

(ஏ) ஆதரவுநல்கும் நாடுகளிலும் வேறு இடங்களிலும் உள்ள நிறுவ னங்களுடனும் ஒழுங்கமைப்புக்களுடனும் முகவர் நிலையங்களுட னும், நிறுவகத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கு அவசிய மான அல்லது பயன்தருவனவான அல்லது உகந்தனவான நோக்கங்களுக்காக உறவுமுறைகளையும் உடன்பாட்டு ஒழுங்கு களையும் கூட்டுறவுக்காகவும் ஒத்துழைப்புக்காகவும் தாபிக்கலாம் அத்துடன் அபிவிருத்தி செய்யலாம்; அத்துடன்

(ஐ) நிறுவகத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கு பயன்தருவனவான அல்லது இடைநேர்விளைவான அல்லது உகந்தனவான வேறு எல்லாச் செயல்களையும் விடயங்களையும் செய்யலாம் அத்துடன் நிறைவேற்றலாம்.

## பாகம் II

## நிறுவகத்தின் ஒழுங்கமைப்பும் முகாமைத்துவமும்

நிறுவகத்தின் ஆளுநர் சபை.

8. நிறுவகமானது, பன்னிரண்டிற்குக் குறையாததும், இருபதிற்கு மேற்படாததுமான உறுப்பினர்களைக் கொண்ட, (இதனகத்துப்பின்னர் "சபை" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) ஆளுநர் சபை ஒன்றினைக் கொண்டிருத்தல் வேண்டும். இவர்களுள்—

(அ) ஆகக்குறைந்தது ஒருவராவது இலங்கை அரசாங்கத்தினால் நியமிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் இவர் நீர்ப்பாசனப் பொறியியலிலும் நீர்ப்பாசன கமத்தொழிலிலும் முகாமைத்துவ அறிவியலிலும் உயர்தொழிற்றகைமைகளை, அனுபவத்தினை, அக்கறையை உடையவரான ஆள் ஒருவராகவிருத்தலும் வேண்டும்; அத்துடன்

(ஆ) ஒருவர், நிறுவகத்தின் பணிப்பாளர் தலைமையதிபதியாக அப்போதைக்குப் பதவிவகிக்கின்ற ஆளாகவிருத்தல் வேண்டுமென்பதுடன் அவர் ஒரு பதவிவழி உறுப்பினராதலும் வேண்டும்.

நிறுவகத்தின் முதலாவது ஆளுநர் சபை.

9. இதனகத்துப்பின்னர் "முதலாவது சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும், முதலாவது ஆளுநர் சபையானது—

(அ) இலங்கை அரசாங்கத்தினால் நியமிக்கப்படும் ஓர் உறுப்பினரையும்;

(ஆ) பதவிவழி உறுப்பினராக இருக்கவேண்டிய, 22 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்தையும்; அத்துடன்

(இ) சர்வதேச நீர்ப்பாசன முகாமைத்துவ நிறுவக ஆதாரவுக் குழுவினால்—

(i) மூன்றில் ஒரு பங்கினர், இரண்டு வருட காலப் பகுதியொன்றுக்குப் பதவி வகிப்பதற்கெனவும்;

(ii) மூன்றில் ஒரு பங்கினர், மூன்று வருட காலப்பகுதியொன்றுக்குப் பதவி வகிப்பதற்கெனவும்; அத்துடன்

(iii) மூன்றில் ஒரு பங்கினர், நான்கு வருட காலப் பகுதியொன்றுக்குப் பதவி வகிப்பதற்கெனவும்,

நியமிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு உறுப்பினர்களையும்,

கொண்டிருத்தல் வேண்டும்.

சபையினல் உறுப்பினர்கள் நியமிக்கப்படுதல்.

10. சருவதேச நீர்ப்பாசன முகாமைத்துவ நிறுவக ஆதரவுக் குழுவினுல் நியமிக்கப்பட்ட எவரேனும் உறுப்பினரின் பதவிக்காலம் முடிவுற்றதன்மேல், சபையானது, 12 ஆம் பிரிவுக்கு அமைவாக, அத்தகைய உறுப்பினரை மீள நியமனம் செய்யலாம் அல்லது வேறோர் ஆளை சபையின் உறுப்பினர் ஒருவராக நியமிக்கலாம்.

மேலதிக உறுப்பினர்களை நியமித்தல்.

11. சபையானது, எந்த நேரத்திலும் 12 ஆம் பிரிவுக்கு அமைவாக, ஆள் எவரையும், சபையின் மேலதிக உறுப்பினர் ஒருவராகவிருப்பதற்கு நியமிக்கலாம் :

ஆயின், உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையானது, எந்த நேரத்திலும் 8 ஆம் பிரிவின்கீழ் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய எண்ணிக்கையினை விஞ்சுதலாகாது.

உறுப்பினர்களின் எண்ணிக்கை.

12. சபையானது, 10 ஆம், 11 ஆம் பிரிவுகளின்கீழ், சபைக்கு உறுப்பினர்களை நியமிப்பதில் :—

(i) ஆதரவு நல்கும் நாடுகளினுல் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட ஆட்களிடையேயிருந்து இரண்டு பேருக்குக் குறையாதோரும் மூன்று பேருக்கு மேற்படாதோருமான உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் என்பதையும் ;

(ii) சருவதேச நீர்ப்பாசன முகாமைத்துவ நிறுவக ஆதரவுக் குழுவின் உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கினரால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட அல்லது அங்கீகரிக்கப்பட்ட ஆட்களிடையேயிருந்து நான்கு உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் என்பதையும் ; அத்துடன்

(iii) நீர்ப்பாசனப் பொறியியலிலும் தொழிற்பாட்டிலும், நீர்ப்பாசன கமத்தொழிலிலும், முகாமைத்துவ அத்துடன் சமூக அறிவியலிலும் ஏனைய இயைபான துறைகளிலும் உயர் தொழிற்றகைமைகள், அனுபவம் அல்லது அக்கறையுடையோரான ஆட்களிடையேயிருந்து ஐந்து பேருக்குக் குறையாத உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் என்பதையும்,

உறுதிப்படுத்தல் வேண்டும்.

சபையினல் நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் பதவி துறத்தல்.

13. சபையினுல் நியமிக்கப்பட்ட உறுப்பினர் எவரும், சபைக்கு முகவரியிடப்பட்டு எழுதப்பட்ட கடிதத்தின்மூலம், எந்த நேரத்திலும் தமது பதவியைத் துறக்கலாம்.

உறுப்பினர்களின் பதவிக் காலம்.

14. (1) சபையினுல் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒவ்வொருவரும், அவர் இறப்பதன் காரணமாக அல்லது பதவிதுறப்பதன் காரணமாகப் பதவியை வறிதாக்கினுலொழிய மூன்றுண்டு காலத்திற்குப் பதவி வகித்தல் வேண்டும் என்பதுடன் மீள நியமிக்கப்படுவதற்குத் தகுதியுடையவராதலும் வேண்டும். சபையின் உறுப்பினர்களின் எண்ணிக்கையானது, எப்பொழுதேனும் அதிகரிக்கப்பட்டால் அல்லது குறைக்கப்பட்டால், சபையானது, சபையினுல் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களுள் மூன்றில் ஒரு பங்கினர் ஆண்டுதோறும் இளைப்பாறுவதனை நடைமுறைப்படுத்தக்கூடியவகையில், உறுதிப்படுத்தி எவரேனும் புதிய உறுப்பினரின் பதவிக் காலத்தில் தகுந்த மாற்றமொன்றினைச் செய்தல் வேண்டும்.

(2) இலங்கை அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட உறுப்பினர், இலங்கை அரசாங்கத்தினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டுமென்பதுடன், இலங்கை அரசாங்கத்தினால் எப்பொழுதேனும் மீள நியமிக்கப்படலாம் அல்லது அகற்றப்படலாம்.

(3) பணிப்பாளர் தலைமையதிபதி, பணிப்பாளர் தலைமையதிபதி என்னும் பதவியை அவர் வகிக்கும்வரை மட்டுமே சபையின் உறுப்பினர் ஒருவராகப் பதவி வகித்தல் வேண்டும்.

மாற்று உறுப்பினர்.

15. (1) இலங்கை அரசாங்கமானது, எந்நேரத்திலும், இலங்கை அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட உறுப்பினர் தொடர்பில், மாற்று உறுப்பினர் ஒருவரை நியமிக்கலாம்.

(2) சபையானது, எந்நேரத்திலும், சபையினால் நியமிக்கப்பட்ட எவரேனும் உறுப்பினர் தொடர்பில், மாற்று உறுப்பினர் ஒருவரை நியமிக்கலாம்.

(3) மாற்று உறுப்பினர் ஒருவர், முதல் உறுப்பினர் வராதிருக்கும் போது மட்டுமே சபையின் கூட்டங்களுக்குச் சமூகமளிக்கலாம், அதில் பங்குபற்றலாம் அத்துடன் வாக்களிக்கலாம்.

சபையினால் நியமிக்கப்பட்ட உறுப்பினர் இறத்தல் அல்லது பதவி விலகல்.

16. சபையினால் நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர் இறப்பதன் காரணமாக அல்லது பதவி விலகுதல் காரணமாக பதவியை வறிதாக்கும் சந்தர்ப்பத்தில், சபையானது, அத்தகைய உறுப்பினரின் பதவிக்காலத்தில் முடிவுறாதெஞ்சியுள்ள காலத்திற்குப் பதவி வகிப்பதற்கென வேறோர் ஆளை நியமித்தல் வேண்டும். அத்தகைய நியமனம் செய்யப்படும்வரை, அத்தகைய உறுப்பினரின் மாற்று உறுப்பினர் எவரேனுமிருப்பின், அவர் சபையின் உறுப்பினரொருவராகப் பணிபுரிதல் வேண்டும்.

சபையின் தவிசாளர்.

17. (1) சபையானது, காலத்திற்குக் காலம், பணிப்பாளர் தலைமையதிபதி தவிர்ந்த, அதன் உறுப்பினர்களுள் ஒருவரை, சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு, அதன் தவிசாளராக விருப்பதற்குத் தெரிவுசெய்தல் வேண்டும்.

(2) தவிசாளர் அல்லது அவர் சமூகமளிக்காதிருந்தால், சபையினால் தெரிவுசெய்யப்பட்ட வேறோர் உறுப்பினர், சபையின் ஒவ்வொரு கூட்டத்திலும் தலைமை வகித்தல் வேண்டும்.

(3) தவிசாளர் அல்லது அத்தகைய வேறு உறுப்பினர், வாக்குகள் சமமாகவிருக்கும் விடயத்தில் தவிர, வாக்களிப்பதற்கு உரித்துடையவராகார்.

சபையின் கூட்டங்கள்.

18. (1) சபையானது ஒவ்வொரு பஞ்சாங்க ஆண்டிலும் ஆகக்குறைந்தது ஒருமுறையாவது கூடுதல் வேண்டும்.

(2) சபையின் கூட்டங்கள், சபையானது வேறுவகையாக வெளிப்படையாகத் தீர்மானித்தாலொழிய, நிறுவகத்தின் தலைமையலுவலகத்திலேயே நடாத்தப்படுதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, ஒரு கூட்டத்திலாயினுஞ்சரி அல்லது சபையினால் ஆக்கப்பட்ட விதிகளினால் தீர்மானிக்கப்பட்ட நடவடிக்கைமுறையின் கீழாயினுஞ்சரி, சபையின் எல்லா முடிபுகளும் ஒரு சாதாரண பெரும்பான்மையின் மூலமானதாகவிருத்தல் வேண்டும்.

சபையின் செயல்கள் அல்லது நடவடிக்கைகள், ஏதேனும் வெற்றிடம் காரணமாக அல்லது உறுப்பினரொருவரின் நியமனத்திலுள்ள ஏதேனும் குறைபாடு காரணமாக செல்லுபடியற்றனவாகக் கருதப்படுதலாகாது.

19. சபையானது அதன் உறுப்பினர்களிடையே வெற்றிடமிருப்பது எவ்வாறிருப்பினும், செயலாற்றுவதற்குத் தத்துவமுடையதாதல் வேண்டுமென்பதுடன் சபையின் செயல் அல்லது நடவடிக்கை எதுவும் அத்தகைய ஏதேனும் வெற்றிடம் அல்லது உறுப்பினரொருவரின் நியமனத்திலுள்ள குறைபாடு காரணமாக மட்டும் செல்லுபடியற்றதாதலுமாகவிருத்தலோ செல்லுபடியற்றதாகக் கருதப்படுதலோ ஆகாது.

நிறுவகத்தின் தத்துவங்கள், கடமைகள், பணிகள் என்பன சபைக்கு உரித்தாக்கப்படல்.

20. நிறுவகத்தின் எல்லாத் தத்துவங்களும் கடமைகளும், பணிகளும் சபைக்கு உரித்தாக்கப்படல் வேண்டும்

சபையினால் தத்துவங்களும் கடமைகளும் பணிகளும் கையளிக்கப்படுதல்.

21. சபையானது, 10 ஆம், 22 ஆம் பிரிவுகளில் குறித்துரைக்கப்பட்ட தத்துவங்களும், கடமைகளும், பணிகளும் தவிர்ந்த அதன் அத்தகைய தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் சபை அவசியமானதெனக் கருதக்கூடியவாறாகவும் அது குறித்துரைக்கக்கூடியதான அத்தகைய நியதி நிபந்தனைகளுக்கு அமைவாகவும் தவிசாளருக்கு, பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அல்லது 24 ஆம் பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள குழுக்களுக்குக் கையளிக்கலாம். எவையேனும் அத்தகைய கையளிப்புகள் எப்படியிருப்பினும், சபையானது தானாகவே, அத்தகைய எவையேனும் தத்துவத்தை, கடமையை அல்லது பணியைப் பிரயோகிக்கலாம், புரியலாம் அத்துடன் நிறைவேற்றலாம் என்பதுடன் எந்நேரத்திலும் எவையேனும் அத்தகைய கையளிப்பை மீளப்பெறலாம்.

சபையின் தத்துவங்களும் கடமைகளும் பணிகளும்.

22. இச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின்கீழ் சபைக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களுக்கும், கடமைகளுக்கும் பணிகளுக்கும் மேலதிகமாகச் சபையானது பின்வரும் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகித்தலும் புரிதலும் நிறைவேற்றுதலும் வேண்டும் :—

(i) நிறுவகத்தின் கொள்கைகளை உருவாக்குதல் ;

(ii) நிறுவகத்தின் பாரிய நிகழ்ச்சித்திட்டங்களை அங்கீகரித்தல் ;

(iii) நிறுவகத்தின் முன்னேற்றத்தினை மீளாய்வுசெய்தலும் மதிப்பீடு செய்தலும் ;

(iv) நிறுவகத்தின் வரவு செலவுத்திட்டத்தினை அங்கீகரித்தலும் நிதி நிலைமையினை மீளாய்வு செய்தலும் ;

(v) நிறுவகத்தின் பணிப்பாளர் தலைமையதிபதியினதும் சிரேஷ்ட பணியாட்டொகுதியினதும் ஆலோசகர்களினதும் நியமனம், ஊதியம், பதவியிலிருந்து விலகுதல் அத்துடன் ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு ;

(vi) நிறுவகத்தின் ஊழியர்களின் சேவை நியதி நிபந்தனைகள் உட்பட ஆளணி மற்றும் பணியாட்டொகுதி பற்றிய கொள்கைகளை அங்கீகரித்தலும் மீளாய்வுசெய்தலும் ;

(vii) நிறுவகத்தின் நிருவாகத்திற்கும் தொழிற்பாட்டிற்கும் நிதி திரட்டுதல் ;

(viii) சபையினது கூட்ட நடப்பெண் உட்பட சபையின் கூட்டங்களும் நிறுவகத்தின் நிருவாகமும் தொழிற்பாடும் தொடர்பிலான, நிருவாக மற்றும் நடவடிக்கைமுறை விதிகளை உருவாக்குதல் ; அத்துடன்

(ix) சபையின் உறுப்பினர்களின் ஊதியத்தினைத் தீர்மானித்தல்.

**நிறுவகத்தின் பணிப்பாளர் தலைமையதிபதி.**

23. (1) சபையினால் நியமிக்கப்பட்ட பணிப்பாளர் தலைமையதிபதி, நிறுவகத்தின் பிரதான நிறைவேற்று அலுவலராக இருத்தல் வேண்டுமென்பதுடன், நிறுவகத்தின் நிருவாகத்திற்கும் அதன் நிகழ்ச்சித் திட்டங்களின் தொழிற்பாட்டிற்கும் அத்துடன் சபையின் தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதற்கும், சபைக்குப் பொறுப்பாகவிருத்தலும் வேண்டும்.

(2) பணிப்பாளர் தலைமையதிபதி, சபையினால் குறித்துரைக்கப்பட்டுள்ள நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் இணங்க அவருக்குக் கையளிக்கக் கூடியவாறான அத்தகைய தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும், பிரயோகித்தலும் புரிதலும் நிறைவேற்றுதலும் வேண்டும்.

(3) பணிப்பாளர் தலைமையதிபதி, தான் சம்பந்தப்பட்டவை தொடர்பிலானவை தவிர, சபை அதன் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகித்தலும் புரிதலும் நிறைவேற்றுதலும் தொடர்பாகச் சபைக்கு ஆலோசனை கூறலாம் என்பதுடன் விதப்புரைகளையும் வழங்கலாம்.

(4) பணிப்பாளர் தலைமையதிபதி, இறப்பதன் காரணமாக, பதவிவிலகுவதன் காரணமாக, பதவியிலிருந்து விலக்கப்படுவதன் காரணமாக அல்லது வேறுவகையில் தனது பதவியை வறிதாக்கினால் அல்லது பணிப்பாளர் தலைமையதிபதி, சுகவீனம் காரணமாக, வருகை தராததன் காரணமாக, பதவியிலிருந்து இடைநிறுத்தப்பட்டதன் காரணமாக அல்லது வேறு ஏதேனும் காரணத்தினால் இப்பதவியின் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகிப்பதற்கும் புரிவதற்கும் நிறைவேற்றுவதற்கும் இயலாதிருப்பின், சபையானது, விடயத்திற்கேற்றாற்போன்று பணிப்பாளர் தலைமையதிபதியினால் பதவியானது மீளப் பொறுப்பேற்கப்படும்வரை அல்லது ஒரு புதிய பணிப்பாளர் தலைமையதிபதி நியமிக்கப்படும்வரை, இப்பதவியின் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும்

பிரயோகிப்பதற்கும் புரிவதற்கும் நிறைவேற்றுவதற்குமென ஒரு பதில் பணிப்பாளர் தலைமையதிபதியை நியமித்தல் வேண்டும். பதில் பணிப்பாளர் தலைமையதிபதி நியமிக்கப்படும்வரை, பிரதிப் பணிப்பாளர் தலைமையதிபதி என்னும் பதவியை வகிக்கும் எவரேனும் ஆள் இருப்பின் அவர் பணிப்பாளர் தலைமையதிபதியின் பதவியில் செயலாற்றுதல் வேண்டும்.

நிலையியற் குழுக்களை அல்லது நிமித்தக் குழுக்களை நியமிப்பதற்குச் சபைக்குள்ள தத்துவம்.

24. சபையானது, அதன் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதற்கும் புரிவதற்கும் நிறைவேற்றுவதற்கும் அவசியமானதென அது கருதக்கூடியவாறான, அத்தகைய வேறு நிலையியற் குழுக்களை அல்லது நிமித்தக் குழுக்களை நியமிக்கலாம். அத்தகைய குழுக்கள், சபையின் உறுப்பினர்களாகவிராத ஆட்களையும் உள்ளடக்கலாம்.

நிறுவகத்தின் இலச்சினை.

25. நிறுவகத்தின் இலச்சினையானது—

(அ) சபையின் தவிசாளரது கட்டுக்காவலில் இருத்தல் வேண்டும்;

(ஆ) சபையினால் அங்கீகரிக்கப்படவேண்டியதான அத்தகைய வடிவத்தில் இருத்தல் வேண்டுமென்பதுடன் சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் மாற்றப்படலாம்; அத்துடன்

(இ) சபையினது அதிகாரபூர்வ அனுமதியுடன் அல்லது சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய விதிகளுக்கிணங்கத் தவிர ஆவணம் எதிலும் பொறிக்கப்படுதலாகாது.

அரசியற் செயற்பாடுகளில் தலையிடாதிருத்தல்.

26. (1) நிறுவகம், சபை அத்துடன் நிறுவகத்தின் அலுவலர்களும் பணியாட்டொகுதியினரும், சட்டமியற்றுதலைச் செல்வாக்குக்குட்படுத்த முயல்வதன்மூலம், அபேட்சகரெவர் சார்பிலும் ஏதேனும் அரசியல் இயக்கத்தில் பங்குபற்றுவதன்மூலம், அல்லது அரசியல் செயல்பாடுகளில் வேறேதேனும் வடிவத்தில் பங்குபற்றுவதன்மூலம், ஆதரவு நல்கும் நாட்டின் அல்லது ஏதேனும் நாட்டின் அரசியல் விவகாரங்களில் தலையிடுதலாகாது என்பதுடன், அவற்றின் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் ஆதரவு நல்கும் நாட்டின் அல்லது சம்பந்தப்பட்ட நாடுகளின் அரசியல் தன்மையினால் ஏதேனும் வழியில் செல்வாக்குக்குட்படுத்தப்படாமல், பக்கச்சார்பில்லாது, பிரயோகித்தலும் புரிதலும் நிறைவேற்றுதலும் வேண்டும்.

(2) நிறுவகத்தின் அலுவலர்களும் பணியாட்டொகுதியினரும், அவர்களது தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகிப்பதிலும் புரிவதிலும் நிறைவேற்றுவதிலும் நிறுவகத்திற்கு மட்டுமே பொறுப்பானவர்களாகவிருத்தல் வேண்டும்.

## பாகம் III

### நிதி

நிறுவகத்தின் நிதியம்.

27. (1) நிறுவகம் அதன் சொந்த நிதியத்தினை வைத்திருந்து பேணி வருதல் வேண்டும்.

(2) நிறுவகத்தின் நிதியத்திற்குள்—

(i) சருவதேச நீர்ப்பாசன முகாமைத்துவ நிறுவக ஆதரவுக் குழுவினால் அல்லது அதன் உறுப்பினர்களால் ஏற்பாடு செய்யப்படக் கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்;

(ii) நிறுவகம் அதன் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகிப்பதிலும் புரிவதிலும் நிறைவேற்றுவதிலும் நிறுவகத்தினால் பெற்றுக்கொள்ளப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்; அத்துடன்

(iii) வருமானமாக, கடன்களாக, மானியக்கொடையாக, கொடையாக அல்லது நிறுவகத்தின் ஏதேனும் உரிமைகளினதும் சொத்துக்களினதும் விற்பனவினால் நிறுவகம் பெறக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்,

செலுத்தப்படுதல் வேண்டும்.

(3) நிறுவகத்தின் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகிப்பதிலும் புரிவதிலும் நிறைவேற்றுவதிலும் நிறுவகத்தினால் உறப்பட்ட ஏதேனும் செலவினங்களைக் கொடுத்துத்தீர்ப்பதற்குத் தேவையான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும், சபையினால் காலத்திற்குக் காலம் ஆக்கப்படக்கூடியவாறான அத்தகைய விதிகளுக்கிணங்க, நிறுவகத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

(4) நிறுவகத்தின் நிதியமானது, சபையானது காலத்துக்குக்காலம் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய பணநோட்டுக்களிலும், அத்தகைய நாடுகளிலும் வைத்திருக்கப்படலாம்.

நிதியாண்டு.

28. நிறுவகத்தின் நிதியாண்டானது, பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

கணக்குகளைக் கணக்காய்வு செய்தல்.

29. (1) நிறுவகத்தின் வருமானமும், சொத்துக்களும் பொறுப்புக்களும் அத்துடன் மற்றெல்லாக் கொடுக்கல் வாங்கல்களும் பற்றிய செவ்வையான கணக்குப் புத்தகங்களைச் சபை வைத்திருக்கச் செய்தல் வேண்டும்.

(2) நிறுவகத்தின் கணக்குகள், சபையினால் நியமிக்கப்பட்ட ஒரு தனிப்பட்ட அத்தாட்சிப்படுத்தப்பட்ட அல்லது பட்டயம்பெற்ற பகிரங்க கணக்காளரினால் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

(3) சபையானது, அத்தகைய கணக்காய்வாளர்களின் ஊதியத்தினைத் தீர்மானித்தல் வேண்டும்.

30. (1) நிறுவகமானது, அதன் கணக்குகளின் கணக்காய்வுக் கூற்றினைக் கொண்ட ஓர் ஆண்டறிக்கையினை வெளியிடுதல் வேண்டும். வெளியீடுகள் முதலியன.

(2) நிறுவகம், விரும்பத்தக்கதென அது கருதக்கூடியதான, அதன் செயற்பாடுகளும் நிகழ்ச்சித்திட்டங்களும் தொடர்பான அத்தகைய வேறு அறிக்கைகளையும் வெளியிடலாம்.

31. நிறுவகமானது, ஒவ்வோர் ஆண்டும், சருவதேச நீர்ப்பாசன முகாமைத்துவ நிறுவக ஆதரவுக் குழுவின் உறுப்பினர்களுக்கு, அவர்களின் கவனத்திற்காக, அடுத்த ஆண்டிற்கான ஒரு வரவுசெலவுத்திட்டத்தினை வழங்குதல் வேண்டும். நிறுவகத்தினது வரவுசெலவுத் திட்டம்.

32. நிறுவகத்தின் பயன்பாட்டிற்கு அவசியமானதெனக் கருதக்கூடிய வாறான அத்தகைய காணியையும், கட்டிடங்களையும் வேறு வசதிகளையும் அரசாங்கம் ஏற்பாடு செய்யலாம். நிறுவகத்தின் பயன்பாட்டிற்கென அரசாங்கம் வளவுகளைக் கிடைக்கச் செய்தல்.

33. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்திற்கும் சருவதேச நீர்ப்பாசன முகாமைத்துவ நிறுவக ஆதரவுக் குழுவினது சார்பில் செயலாற்றும் போர்ட் மன்றத்திற்கும் இடையில், நீர்ப்பாசன முகாமைத்துவத்தில் ஆராய்ச்சி செய்வதற்கும் பயிற்சியளிப்பதற்குமென ஒரு சருவதேச நிறுவகத்தைத் தாபிப்பதற்காக 1983 செத்தெம்பர் 1 ஆந் தேதியன்று கையொப்பமிடப்பட்ட உடன்படிக்கை நிருபத்தின் மூலம்— நிறுவகத்தின் உரிமைகள், சிறப்புரிமைகள், பாதிப்பின்மைகள், விலக்களிப்புக்கள் என்பன.

(அ) நிறுவகத்திற்கும் ;

(ஆ) நிறுவகத்தின் பணிப்பாளர் தலைமையதிபதி, உசாத்துணைவர்கள், அலுவலர்கள், அத்துடன் சேவையாளர்கள் என்போருக்கும்,

அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கு அமைவாக அளிப்பதற்கு அரசாங்கம் உடன்பட்டுக்கொண்டுள்ளதான அத்தகைய எல்லா உரிமைகளும் சிறப்புரிமைகளும் பாதிப்பின்மைகளும் அத்தகைய நிறுவகத்திற்கும், அத்தகைய நிறுவகத்தின் பணிப்பாளர் தலைமையதிபதி, உசாத்துணைவர்கள், அலுவலர்கள் அத்துடன் சேவையாளர்கள் என்போருக்கும் அளிக்கப்படுவதனை உறுதிப்படுத்துவதற்கு அவசியமானவையான அத்தகைய எல்லா நடவடிக்கைகளையும் அரசாங்கம் எடுத்தல் வேண்டும்.

34. சருவதேச நீர்ப்பாசன முகாமைத்துவ நிறுவக ஆதரவுக் குழுவினது அல்லது சபையினது உறுப்பினர் எவரும், அத்தகைய உறுப்பாண்மையின் காரணமாக மட்டும், நிறுவகத்தின் கடன்களுக்கும் கடப்பாடுகளுக்கும் பொறுப்பாளியாதல் ஆகாது. உறுப்பினர்களின் பொறுப்புக்களை வரையறுத்தல்.

35. (1) (அ) உத்தேச தீர்மானத்தின் முழு விபரத்தையும் எடுத்துக் கூறி எட்டு வாரங்களுக்குக் குறையாத அறிவித்தல் கொடுக்கப்பட்டதான ஒரு கூட்டத்தில் சமூகமாயிராதோர் உட்பட பூரண உறுப்பினர் தொகையில் நாலில் மூன்றுக்குக் குறையாதோரால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் ஒன்றின்மூலம் ஆளுநர் சபையானது, நிறுவகத்தின் அலுவல்களை ஒடுக்குதல்.

நிறுவகத்தின் குறிக்கோள்கள் திருப்திகரமான அளவுக்கு எய்தப்பட்டுள்ளது அல்லது நிறுவகமானது திறமையாகத் தொழிற்பட இயலாதுள்ளது என்ற ஏதுவின் மீது நிறுவகத்தின் தொழிற்பாடுகளையும் செயற்பாடுகளையும் முடிவுறுத்த முடிவுசெய்யலாம்.

(ஆ) அத்தகைய தீர்மானமானது நிறைவேற்றப்பட்டதன் மேல்,—

(i) நிறுவகமானது, அதன் அலுவல்களை முறையாக ஒடுக்குதலுக்கு அவசியமானவாறனவையும் அல்லது இடைநேர்விளைவானவையும் சொத்துக்களைப் பாதுகாத்தலும் பெறுதலும், அதன் கடப்பாடுகளைத் தீர்த்துவைத்தலும் தவிர்ந்த அதன் எல்லாச் செயற்பாடுகளையும் தொழிற்பாடுகளையும் உடனடியாக நிறுத்துதல் வேண்டும் ; அத்துடன்

(ii) இலங்கை அரசாங்கத்தினால் (அல்லது வேறேதேனும் ஆதரவு நல்கும் நாட்டினால்) வழங்கப்பட்ட காணிகளும் கட்டடங்களும் அவற்றுக்கான எவையேனும் நிரந்தரமான, பெருமளவிலான திருத்தங்களும் அவற்றுக்கும் அவற்றிலுமான எல்லா உரிமைகளும் அக்கறைகளும் நிறுவகம் அதன் அலுவல்களை முறையாக ஒடுக்குவதற்கு அவசியமான காலப்பகுதிக்காக நிறுவகத்தினால் இருப்பாட்சி செய்யப்படுவதற்கும் பயன்படுத்தப்படுவதற்கும் அமைவாக, இலங்கை அரசாங்கத்திற்கு அல்லது அத்தகைய வேறு ஆதரவுநல்கும் நாட்டிற்கு மீண்டும் உரிமையாதல் வேண்டும்.

(இ) நிறுவகத்தின் அலுவல்களை ஒடுக்குதலானது முடிவுற்றதன்மேல், (முற்போந்த பந்தியின் (ii) ஆம் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ளவை தவிர்ந்த) நிறுவகத்தின் எல்லாச் சொத்துக்களும் அல்லது அவற்றின் விற்றுவரவுகளும், ஆளுநர்கள் சபையினது தீர்மானமொன்றின் மூலம், புறநீங்கலாகத் தரும நோக்கங்களுக்காக ஒழுங்குபடுத்தப்பட்டு தொழிற்படுத்தப்படும் ஒழுங்கமைப்புக்கு அல்லது ஒழுங்கமைப்புகளுக்கு அல்லது ஒழுங்கமைப்பின் அல்லது ஒழுங்கமைப்புகளின் நலனுக்காகப் புறநீங்கலாகக் கையாளப்படுதல் வேண்டும்.

(2) நிறுவகத்தின் அலுவல்கள் ஒடுக்கப்பட்டதன்மேலாயினுஞ்சரி அல்லது வேறுவகையிலாயினுஞ்சரி, நிறுவகத்தின் சொத்துக்களின், வருமானத்தின், இலாபங்களின் அல்லது தேறிய வருமானங்களின் எப்பாகமும், நிறுவகத்தின் குறிக்கோள்கள் அல்லது செயற்பாடுகள் தொடர்பில் நிறுவகத்திற்கு ஆற்றப்பட்ட சேவைகளுக்கான நியாயமான நட்டஈடாக அல்லது ஊதியமாகச் செலுத்தப்படுதல் தவிர, நிறுவகத்தின் எவரேனும் அலுவலரின், ஊழியரின், முகவரின் அல்லது நம்பிக்கைப்பொறுப்பாளரின், சபையின் உறுப்பினர்களின் அல்லது வேறு எவரேனும் ஆளின் நன்மைக்காகச் சென்றடைதலாகாது.

36. இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையில் தேவைப்படுத்தினுலன்றி— பொருள் கோடல்.

"தரும நோக்கங்கள்" என்பது கல்வியை அல்லது அறிவை முன்னேற்றுவதுடன் அல்லது வறுமை நிவாரணத்துடன் சம்பந்தப்பட்டதாய் மனித இனத்திற்கு நன்மை பயக்கின்ற நோக்கங்கள் என்று பொருளாகும்;

"ஆதரவுநல்கும் நாடு" என்பது இலங்கை எனவும், நிறுவகம் அதன் தலைமை அலுவலகத்தை, பிரதான அலுவலகத்தை அல்லது கிளையொன்றை அல்லது ஒத்துழைப்பு நிலையமொன்றை எந்நாட்டில் தாபித்துள்ளதோ அவ்வேதேனும் நாடு எனவும் பொருளாகும்;

"சருவதேச நீர்ப்பாசன முகாமைத்துவ நிறுவக ஆதரவுக் குழு" என்பது 1983, மே 24 ஆந் தேதி தொடக்கம் மே 27 ஆந் தேதி வரை பரிஸ் நகரத்தில் கூடிய இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட நாடுகளினதும் ஒழுங்கமைப்புகளினதும் உதவி மூலம் தாபிக்கப்பட்ட சருவதேச நீர்ப்பாசன முகாமைத்துவ நிறுவக ஆதரவுக் குழு என்று பொருளாகும்.

அட்டவணை [பிரிவு 36]

ஆரம்ப உறுப்பினர்கள் (தற்காலிகமானது)

சருவதேச நீர்ப்பாசன முகாமைத்துவ நிறுவக ஆதரவுக் குழு

1. பலதரப்பாக இருவயினொத்த அல்லது தேசிய ரீதியில் நிதியாகவோ பொருளாகவோ உதவுவோர்:

அகா கான் நிதித்தாபனம்
ஆசிய அபிவிருத்தி வங்கி
அவுஸ்திரேலியா
பிரான்ஸ்
போர்ட் நிதித்தாபனம்
ஐஎவ்ஏடீ
நெதர்லாந்து
றொக்பெல்லர் சகோதரர்கள் நிதியம்
றொக்பெல்லர் நிதித்தாபனம்
ஐக்கிய இராச்சியம்
ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம்
யூஎஸ்ஏ
உலக வங்கி
ஐடீஆர்சி

2. ஒன்றில் தலைமைச் செயலகமாக அல்லது பங்குபற்றும் கூறுகளாகப் பங்குபற்றும் நாடுகளாக உதவுவோர்:

இந்தியா
பாகிஸ்தான்
பிலிப்பைன்ஸ்
இலங்கை

3. அவதானிப்பாளர்கள்:

எவ்ஏஓ

நிதியங்கள் காப்பாளர்

உலக வங்கி

அமுலாக்கும் முகவர் நிலையம்

போர்ட் நிதித்தாபனம்

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 150 : (வெளிநாடு) ரூபா 200 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்காய சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், த. பெ. இல. 500 கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*